# திருப்பூர் மாநகராட்சி

**2020 மே மாதம் 06-ந் தேதி நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண். 1017 முதல்1018 வரை**

**26-05-2020-ந் தேதி நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண். 1019 முதல் 1023 வரை**

**29-05-2020-ந் தேதி நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண். 1024 முதல் 1029 வரை**

## திருப்பூர் மாநகராட்சி

**2020 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆம் தேதி புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.**

**முன்னிலை : திரு.க.சிவகுமார், எம்.ஏ.,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,**
**திருப்பூர் மாநகராட்சி.**

******

**1017)** திருப்பூர் மாநகராட்சி -COVID-19- கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவாமல் தடுக்க 1) நஞ்சப்பா ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகம் 2) L.R.G. மகளிர் கல்லூரி வளாகம் ஆகிய இரண்டு இடங்களில் போகஸ் விளக்குகள் மற்றும் ஒலி பெருக்கிகள் வாடகை அடிப்படையில் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.4.34 இலட்சத்திற்கு 19-04-2020 முதல் 03-05-2020 வரை 15 நாட்களுக்கு மாநகராட்சிகள் சட்டம் விதியின் எண்.15-ன் கீழ் 16-04-2020 அன்று தனி அலுவலர் அவர்களால் நிர்வாக அனுமதி பெறப்பட்டு குறைவான விலைப்புள்ளி கொடுத்த **M/s. Thaai Electrical Works & Sound Service** அவர்களுக்கு தனி அலுவலர் அவர்களின் ஒப்புதல் பெற்று பணி நடைபெற்று வருகிறது. தற்பொழுது மேலும் மே-17-ஆம் தேதி வரை (14 நாட்களுக்கு) ஊரடங்கு நீட்டிப்பு செய்து தமிழக அரசு உத்திரவிடப்பட்டுள்ளதால் மேற்கண்ட 2 இடங்களில் இப்பணியை மேற்படி பணிக்கு குறைந்த விலைவிகிதம் கொடுத்த **M/s. Thaai Electrical Works & Sound Service, Tiruppur** அவர்கள் மூலம் 14 நாட்களுக்கு நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம். கூடுதல் செலவினம் ரூ.4.05 இலட்சத்திற்கு தனி அலுவலர் மற்றும் மாநகராட்சி ஆணையர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு ஏற்கலாம். மேலும் மாமன்றத்தில் பதிவு செய்ய பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. இப்பணியின் அவசர அவசியம் கருதியும் மாநகராட்சி சட்ட விதி 15 பணியாக உள்ளதால் மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலுடன் நிர்வாக அனுமதி மற்றும் பணி நீட்டிப்பு ஆணை வழங்கிதையும் ஏற்கலாம்.
2. பதிவு செய்யலாம். ( இ.1 / 1209 / 2020 / ம.4)

-------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

-------

**1018)** அம்ரூத் திட்டம் 2017-18 மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) நிதியுடன் விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் மேற்கொள்ள அரசாணை எண்.50, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ( MA2) நாள் 21-05-2018ல் நிர்வாக ஒப்புதல் ரூ.604.05 கோடிக்கு வழங்கப்பட்டதில் பணிகளை 4 சிப்பங்களாக பிரித்து ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு இந்திய அளவில் ஆங்கிலம் மற்றும் மாநில அளவில் தமிழ் நாளிதழ்களில் வெளியிடப்பட்டு அதனடிப்படையில் 25-11-2019 அன்று சிப்பம் எண்-1 பணிக்கு வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப தகுதியுள்ளது என திருப்பூர் மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவால் முடிவு செய்யப்பட்டது. இதன் விபரம் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக தொழில்நுட்ப நிலைக்குழுவின் ( Technical Standing Committee) பரிசீலனைக்குப் பிறகான பரிந்துரையின் அடிப்படையில் ஆசிய வளர்ச்சி வங்கியின் தடையின்மைச் சான்று பெறப்பட்டது.

வரப்பெற்ற தகுதியுடைய ஒப்பந்தப்புள்ளியை வழங்கிய **M/s. Eco Protection Engineers Pvt., Ltd., Chennai நிறு**வனத்தின் விலைவிகிதமானது 2018-19 ஆம் ஆண்டின் PWD & TWAD SoR-ன் அடிப்படையில் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்ட

**1018-ன் தொடர்ச்சி**

மதிப்பீட்டை விட 30.01% அதிகமாகவும், 2019-20 ஆண்டின் PWD & TWAD Board SoR-ன்படி மதிப்பீட்டை விட 17.08 சதவீதம் அதிகமாகவும் இருந்தது.

மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து விலைப்புள்ளி மதிப்பாய்வு அறிக்கையினை ஆசிய வளர்ச்சி வங்கியின் தடையின்மைச் சான்று பெற 18-02-2020 அன்று அனுப்பி வைக்கப்பட்டது. ஆசிய வளர்ச்சி வங்கியானது தனது 25-03-2020-ம் தேதிய கடிதத்தில் மேற்படி விலைப்புள்ளியானது மதிப்பீட்டைவிட மிகவும் அதிகமானது என தாங்கள் கருதவில்லை எனவும், எனவே மேற்படி நிறுவனத்திடம் விலைக்குறைப்பு கோருவதற்கு தாங்கள் ஆதரவளிக்கவில்லை எனவும், மேலும் மேற்படி நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி விலையான ரூ.3,20,22,11,949.60 -க்கு பணி உத்திரவு வழங்க தாங்கள் பரிந்துரைப்பதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

மேலும் பொதுப்பணித் துறையின் (PWD) 2020-21ஆம் ஆண்டிற்கான SoR 20-04-2020 அன்று வெளியிடப்பட்டது. எனவே சிமெண்ட், மணல், ஜல்லி, கம்பி, செங்கல் மற்றும் கூலி ஆகியவற்றை பொதுப்பணித்துறையின் 2020-21-ஆம் ஆண்டிற்கான SoR-ன் அடிப்படையிலும் குழாய்கள், பம்புகள் முதலிய மின்தளவாடங்கள் மற்றும் இயந்திர தளவாடங்கள் ஆகியவற்றை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் (TWAD Board) 2019-20 ஆம் ஆண்டிற்கான SoR-ன் அடிப்படையிலும் ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டது. இதனடிப்படையில் மேற்படி நிறுவனத்தின் விலைவிகிதமானது மதிப்பீட்டை விட 12.50 சதவீதம் அதிகமாக உள்ளது.

சிமெண்ட், மணல், ஜல்லி, கம்பி. செங்கல், கூலி, குழாய்கள், மின்தளவாடங்கள் மற்றும் இயந்திர தளவாடங்கள் ஆகியவற்றின் உள்ளூர் சந்தை விலைவிகிதமானது பொதுப்பணித் துறை மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தற்போதைய விலைவிகிதங்களை விட அதிகமாக உள்ளது. எனவே உள்ளூர் சந்தை விலைவிகிதத்தின் அடிப்படையிலும் ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டது. இதனடிப்படையில் மேற்படி நிறுவனத்தின் விலைவிகிதமானது மதிப்பீட்டை விட 2.18 சதவீதம் அதிகமாக உள்ளது.

| ஒப்புநோக்கு செய்யப்பட்ட விலைவிகித விபரம் | ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட தொகை (Value Put to Tender) | ஒப்பந்ததாரர் வழங்கிய ஒப்பந்த மதிப்பு | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|
| PWD & TWAD SoR 2018-19-ன் அடிப்படையில் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்ட மதிப்பீட்டின்அடிப்படையில் | ரூ.246.30 கோடி | ரூ.320.22 கோடி | 30.01% அதிகம் |
| PWD & TWAD SoR 2019-20-ன் விலைவிகித அடிப்படையில் | ரூ.273.50 கோடி | ரூ.320.22 கோடி | 17.08% அதிகம் |
| PWD & SoR 2020-21 & TWAD SoR-ன் 2019-20-ன் விலைவிகித அடிப்படையில் | ரூ.284.64 கோடி | ரூ.320.22 கோடி | 12.50% அதிகம் |
| தற்போதைய உள்ளூர் சந்தை விலைவிகிதத்தின் அடிப்படையில் | ரூ.313.40 கோடி | ரூ.320.22 கோடி | 2.18% அதிகம் |

எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாநில அளவிலான ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யும் குழுவின் ( Tender Award Committee ) முடிவிற்கு பரிந்துரைக்கலாம். மேலும் இவ்வினத்தில் மதிப்பீட்டை விட கூடுதலாக ஏற்படும் செலவினத்தை மாநகராட்சியின் நிதிநிலைமை ஏற்கக் கூடியதாக இல்லை என்பதால் இத்தொகையை வேறு அரசு மான்யங்களிலிருந்து ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பிக்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களை கோர மாமன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம். (இ.1 / 4813 / 2017 - 1 )

------

**தீர்மானம் : ஒப்புதல் வழங்கப்பட்டது.**

-------

(ஒம்) க.சிவகுமார், எம்.ஏ.,
தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்,
திருப்பூர் மாநகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையருக்காக,

திருப்பூர் மாநகராட்சி.

**திருப்பூர் மாநகராட்சி**

**2020 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் தேதி செவ்வாய்கிழமை மாலை 5.00 மணிக்கு மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.**

**முன்னிலை : திரு.க.சிவகுமார், எம்.ஏ.,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,**
**திருப்பூர் மாநகராட்சி.**

******

**1019)** அம்ரூத் திட்டம் 2017-18 திட்டத்தின் கீழ் திருப்பூர் மாநகராட்சியில் ரூ.604.05 கோடி மதிப்பீட்டில் விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் மேற்கொள்ள அரசாணை எண்.50, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ( MA2) நாள் 21-05-2018-ல் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டதையடுத்து 4 சிப்பங்களாக மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு தலைமைப் பொறியாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை, ந.க.எண். 25477/2017/ DO1, நாள் 04-07-2019 வாயிலாக திருத்தியமைக்கப்பட்ட தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டது. தொழில்நுட்ப அங்கீகாரம் பெறப்பட்ட **சிப்பம் எண்.1** பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அழைப்பினை ( இரண்டாம் அழைப்பு ) இந்திய அளவில் ஒரு ஆங்கிலம் மற்றும் மாநில அளவில் ஒரு தமிழ் நாளிதழ், மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் மற்றும் இந்திய வர்த்தக பத்திரிக்கை (ITJ) ஆகியவற்றில் விளம்பரம் செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் 25-11-2019 அன்று சிப்பம் எண்.1-க்கு பணிக்கு வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளியானது தொழில்நுட்ப தகுதியுள்ளது என திருப்பூர் மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவால் முடிவு செய்யப்பட்டது. இதன் விபரம் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக தொழில்நுட்ப நிலைக்குழுவின் ( Technical Standing Committee) பரிசீலனைக்குப் பிறகான பரிந்துரையின் அடிப்படையில் ஆசிய வளர்ச்சி வங்கியின் தடையின்மைச் சான்று பெறப்பட்டது.

தொழில்நுட்ப தகுதியுடைய மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை வழங்கிய **M/s. Eco Protection Engineers Pvt.Ltd., Chennai** நிறுவனத்தின் விலைவிகிதமானது 2018-19 ஆண்டின் PWD & TWAD SoR-ன் அடிப்படையில் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்ட மதிப்பீட்டை விட 30.01% அதிகமாகவும், 2019-20 ஆண்டின் PWD & TWAD Board SoR-ன் படி மதிப்பீட்டை விட 17.08% அதிகமாகவும், இருந்தது.

மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து விலைப்புள்ளி மதிப்பாய்வு அறிக்கையினை ஆசிய வளர்ச்சி வங்கியின் தடையின்மைச் சான்று பெற 18-02-2020 அன்று அனுப்பி வைக்கப்பட்டது. ஆசிய வளர்ச்சி வங்கியானது தனது 25-03-2020-ம் தேதிய கடிதத்தில் மேற்படி விலைப்புள்ளியானது மதிப்பீட்டை விட மிகவும் அதிகமானது என தாங்கள் கருதவில்லை எனவும், எனவே மேற்படி நிறுவனத்திடம விலைக்குறைப்பு கோருவதற்கு தாங்கள் ஆதரவளிக்கவில்லை எனவும், மேலும் மேற்படி நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி விலையான ரூ.3,20,22,11,949.60-க்கு பணி உத்திரவு வழங்க தாங்கள் பரிந்துரைப்பதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

மேலும் பொதுப்பணித் துறையின் ( PWD) 2020-21-ஆம் ஆண்டிற்கான SoR 20-04-2020 அன்று வெளியிடப்பட்டது. எனவே சிமெண்ட், மணல், ஜல்லி, கம்பி, செங்கல் மற்றும் கூலி ஆகியவற்றை பொதுப் பணித் துறையின் 2020-21- ஆம் ஆண்டிற்கான SoR-ன் அடிப்படையிலும், குழாய்கள், பம்புகள் முதலிய மின்தளவாடங்கள் மற்றும் இயந்திர தளவாடங்கள் ஆகியவற்றை தமிழ்நாடு குடிநீர்

**1019-ன் தொடர்ச்சி**

வடிகால் வாரியத்தின் (TWAD Board) 2019-20 ஆம் ஆண்டிற்கான SoR-ன் அடிப்படையிலும் ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டது. இதனடிப்படையில் மேற்படி நிறுவனத்தின் விலைவிகிதமானது மதிப்பீட்டை விட 12.50% அதிகமாக உள்ளது.

சிமெண்ட், மணல், ஜல்லி, கம்பி, செங்கல், கூலி, குழாய்கள், மின்தளவாடங்கள் மற்றும் இயந்திர தளவாடங்கள் ஆகியவற்றின் உள்ளூர் சந்தை விலைவிகிதமானது பொதுப் பணித்துறை மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தற்போதைய விலைவிகிதங்களை விட அதிகமாக உள்ளது. எனவே உள்ளூர் சந்தை விலைவிகிதத்தின் அடிப்படையிலும் ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டது. இதனடிப்படையில் மேற்படி நிறுவனத்தின் விலைவிகிதமானது மதிப்பீட்டை விட 2.18% அதிகமாக உள்ளது.

| ஒப்புநோக்கு செய்யப்பட்ட விலைவிகித விபரம் | ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட தொகை (Value Put to Tender) | ஒப்பந்ததாரர் வழங்கிய ஒப்பந்த மதிப்பு | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|
| PWD & TWAD SoR 2018-19-ன் அடிப்படையில் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்ட மதிப்பீட்டின்அடிப்படையில் | ரூ.246.30 கோடி | ரூ.320.22 கோடி | 30.01% அதிகம் |
| PWD & TWAD SoR 2019-20-ன் விலைவிகித அடிப்படையில் | ரூ.273.50 கோடி | ரூ.320.22 கோடி | 17.08% அதிகம் |
| PWD & SoR 2020-21 & TWAD SoR-ன் 2019-20-ன் விலைவிகித அடிப்படையில் | ரூ.284.64 கோடி | ரூ.320.22 கோடி | 12.50% அதிகம் |
| தற்போதைய உள்ளூர் சந்தை விலைவிகிதத்தின் அடிப்படையில் | ரூ.313.40 கோடி | ரூ.320.22 கோடி | 2.18% அதிகம் |

மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் ஒப்புதலுடன் மாநில அளவிலான ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யும் குழுவின் ( State Tender Award Committee)முடிவிற்கு அனுப்பப்பட்டது. மாநில அளவிலான ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யும் குழுவின் (State Tender Award Committee)கூட்ட நடவடிக்கைகள் நாள் 21-05-2020-ல் PWD SoR2020-21-ன் படியும் TWAD SOR 2019-20-ன் படியும் 12.50% அதிகமுள்ள **M/s.Eco Protection Engineers Pvt.Ltd., Chennai** நிறுவனத்தின் ரூ.3,20,22,11,949.60 ( GST உட்பட) மதிப்பிலான ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம் என பரிந்துரை வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் ஒப்புதலுக்காக பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம். ( இ.1 / 4813 / 2017 - 2)

-------

## தீர்மானம் : ஒப்புதல் வழங்கப்பட்டது.

-------

**1020)** திருப்பூர் மாநகராட்சி, மண்டலம் எண்.2, வார்டு எண்.26, புதிய பேருந்து நிலைய வளாகத்தில் Smart City திட்டத்தின் கீழ் கூடுதல் பேருந்து முனையக் கட்டிடம் கட்ட இடையூறாக உள்ள 16 எண்ணிக்கையிலான மரங்களை அகற்ற வருவாய் கோட்டாட்சியர், திருப்பூர் அவர்களின் செயல்முறைக் கடிதம் ந.க.எண். 582 / 2020 / அ.3, நாள் 14-02-2020 அன்று அனுமதி பெறப்பட்டு, ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டு 18-03-2020 அன்று புதிய பேருந்து நிலைய வளாகத்தில் பொது ஏலம் நடத்தப்பட்டது. மேற்படி ஏலத்தில் கீழ்க்கண்ட நபர்கள் முன்வைப்புத் தொகை ரூ.160/- செலுத்தி கலந்து கொண்டார்கள்.

**1020-ன் தொடர்ச்சி**

| | | | |
|---|---|---|---|
| 1) | கே.லோகநாதன், திருப்பூர் | 2) | ஏ,ஆறுச்சாமி, திருப்பூர் |
| 3) | கோ.விஜயகுமார், திருப்பூர் | | |
| மேலும் கீழ்க்கண்ட நபர்கள் பொது ஏலத்தில் கலந்து கொண்டார்கள் | | | |
| 4) | சி.காளிமுத்து, உடுமலைப்பேட்டை | 9) | எஸ்.கமலக்கண்ணன், திருப்பூர் |
| 5) | கே.கார்த்திக், மண்ணரை, திருப்பூர் | 10) | ஏ.பி.கார்த்திகேயன், ஈரோடு |
| 6) | ஆர்.கார்த்திக், உடுமலைப்பேட்டை | 11) | எஸ்.பால்ராஜ், தாராபுரம் ரோடு, திருப்பூர் |
| 7) | டி.ராஜீவ். புதுக்கோட்டை | 12) | ஆர்.மணிவேல், திண்டுக்கல் |
| 8) | எம்.மகாமுனி, கோவை | 13) | டி.ஆனந்தகுமார், அனுப்பர்பாளையம்,திருப்பூர். |

மேற்படி 16 மரங்களுக்கு அரசு மதிப்பாக ரூ.7500/- நிர்ணயம் செய்யப்பட்டது. முதல் சுற்றில், திரு.எஸ்.பால்ராஜ் ரூ.8000/-, திரு கே.லோகநாதன் - ரூ.8100/-, திரு.ஏ.பி.கார்த்திகேயன்- ரூ.8200/-, திரு.டி.ஆனந்தகுமார்-ரூ.8300/- மற்றும் திரு.ஆர்.மணிவேல் - ரூ.8400/-க்கு ஏலக்கேள்வி கோரினார்கள்.

இரண்டாவது சுற்றில் திரு.எஸ்.பால்ராஜ் ரூ.8500/-, திரு.டி.ஆனந்தகுமார்-ரூ.8550/-, திரு கே.லோகநாதன் - ரூ.8600/-, மற்றும் திரு.ஆர்.மணிவேல் - ரூ.8650/-க்கு ஏலக்கேள்வி கோரினார்கள்.

மூன்றாவது சுற்றில் திரு கே.லோகநாதன் - ரூ.8750/-, திரு.எஸ்.பால்ராஜ் ரூ.8800/-, திரு.டி.ஆனந்தகுமார்-ரூ.8850/-, திரு.ஆர்.மணிவேல் - ரூ.8900/- மற்றும் திரு.ஏ.பி.கார்த்திகேயன்- ரூ.8950/- க்கு ஏலக்கேள்வி கோரினார்கள்.

நான்காவது சுற்றில் திரு கே.லோகநாதன் என்பவர் ரூ.9000/-,க்கு அதிகபட்ச ஏலக்கேள்வி கோரியுள்ளார். அரசு மதிப்பு ரூ.7150/-யை விட அதிகத் தொகை ரூ.9000/-க்கு திரு.கே.லோகநாதன் என்பவர் ஏலம் கோரியுள்ளதாலும் அந்த தொகையினை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்துசீட்டு எண். 1033, 18-03-2020-ல் ரூ.9000/- செலுத்தியுள்ளார். எனவே மாமன்றத்தின் ஒப்புதல் பெறவும், அரசு திட்டப் பணியாக உள்ளதால் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்குவது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : அனுமதி வழங்கலாம். (இ1/3166/2018 /ம.2)

--------

## தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.

------

**1021)** திருப்பூர் மாநகராட்சியில் 2019-20ம் ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 15 வேலம்பாளையம் ஜே.ஜி.கார்டன் சோளிபாளையம் வட்ட சாலையில் மழைநீர் வடிகால் கட்டும் பணிக்கு மதிப்பீடு ரூ.35.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டது. இதில் திருவாளர்கள். ஜே.ஜி.ஹொசைரி பிரைவேட் லிமிடெட், கோவை நிறுவனத்தார் 50 சதவீத பங்களிப்புத் தொகையாக ரூ.17.50 இலட்சம் செலுத்தியுள்ளதால் ஒப்பந்தப்புள்ளி கோராமல் மாநகராட்சி சார்பாக திருவாளர்.ஸ்ரீசாய் அசோசியேட்ஸ் என்ற நிறுவனம் மூலம் பணியினை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பூர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.3207/2019/அ4, நாள் 12-05-2020-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு தனி அலுவலர் அவர்களின் அதிகாரத்திற்குட்பட்டு கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டதை பார்வைக்கும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

முக்கிய நிபந்தனைகள்

1. இந்த உத்திரவு கிடைத்த மூன்று நாட்கள் காலத்திற்குள் ரூ.20/- மதிப்புள்ள முத்திரைத்தாளில் ஒப்பந்தப்பத்திரம் மாநகராட்சி ஆணையர் பெயருக்கு எழுதிக் கொடுத்து உடனடியாக பணிகள் துவக்கப்பட வேண்டும். பணி உத்திரவில் தெரிவித்துள்ள கால அளவிற்குள் பணியினை முடிக்க வேண்டும்.

**1021-ன் தொடர்ச்சி**

2. அரசாணை எண்.92, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை நாள் 24-07-2019இல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகள் தவறாமல் கடைபிடிக்கப்பட வேண்டும்
3. நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பணிக்கான இடத்தினை எக்காரணத்தைக் கொண்டும் மாறுதல் செய்யக் கூடாது.
4. பிறதுறைகளிடம் தடையின்மைச் சான்று பெறப்பட வேண்டிய இனங்களில், தொடர்புடைய பணிச்செயலாக்க அலுவலர் தடையின்மைச் சான்றினை பெற உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
5. மொத்த மதிப்பீட்டிற்குக்குள்ளேயே பணிகள் முடிக்கப்பட வேண்டும்.
6. பணிகள் துவங்கும் நிலை, பணி நடைபெறும் நிலை மற்றும் பணி முடிவுற்ற நிலை ஆகிய மூன்று நிலைகளில் புகைப்படங்கள் எடுத்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
7. அரசு விதிமுறைகளின்படி பணிகள் தரம் பராமரிக்கப்பட வேண்டும். பணியின் தரத்திற்கு பணிச்செயலாக்க அலுவலரான மாநகராட்சி ஆணையாளர் முழுப்பொறுப்பேற்க வேண்டும்.
8. வேலை உத்திரவு வழங்கப்பட்ட ஆறு மாதத்திற்குள் பணியினை முடிக்க வேண்டும்.
9. பணித்தளத்தில் பின்வரும் விபரங்கள் அடங்கிய விபரப் பலகை ஒப்பந்ததாரரால் நிறுவப்பட வேண்டும்.
   அ திட்டத்தின் பெயர் ஆ) பணியின் பெயர் மற்றும் திட்ட செயலாக்க ஆண்டு இ) மதிப்பீட்டுத் தொகை ஈ) செயல்படுத்தும் துறை உ) பணி துவங்கப்படும் நாள் மற்றும் முடிவுறும் நாள் ஊ) ஒப்பந்ததாரர் பெயர் / சார்பு நிறுவனத்தின் பெயர்
10. தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் பணிகள் / சொத்துக்களை சம்மந்தப்பட்ட துறை முறையாகப் பராமரித்து வர வேண்டும். தொடர் பராமரிப்பு செலவினங்கள் எதுவும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையால் வழங்கப்பட மாட்டாது.
11. சொத்தின் உரிமைதாரரின் முன்அனுமதி பெறாமல் எந்த நிரந்தர கட்டுமான பணியும் செய்யக் கூடாது.
12. பணிக்கான பங்களிப்பை அளிக்க முன்வரும் நபர் / நிறுவனம் சொத்திலோ அல்லது அதன் பயன்பாட்டிலோ எந்த உரிமையும் கோர இயலாது,.
13. பணிக்கான பங்களிப்பு நிதி வழங்கியவர்களின் பெயர்களை மாவட்ட ஆட்சித் தலைவரின் முன்அனுமதி பெற்று பணி நடைபெறும் இடத்தில் பெயர்பலகை மூலம் காட்சிக்கு வைக்கலாம். பெயர்பலகையில் மூன்றில் இரண்டு பகுதிக்கு குறையாத அளவில் தன்னிறைவுத் திட்டம் என்று தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். பணி மேற்கொள்ளப்படும் இடத்தின் கலைநயத்திற்கு குந்தகம் ஏற்படாத வகையிலும் திட்டப் பணிக்காக பங்களித்தோர் பெயர்பலகை வைக்க அனுமதிக்கலாம். ஆனால் பங்களித்தோர் அந்த சொத்தின் மீது உரிமையோ / குத்தகைக்கு உரிமையோ கோரக்கூடாது.

**அலுவலகக் குறிப்பு** :

1. பதிவு செய்யலாம்.
2. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.3207/2019/அ.4 நாள் 12-05-2020 ஏற்றுக் கொள்ளப்பட்டு பணி ஆணை வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை அனுமதிக்கலாம். ( இ.1 / 335 / 2019)

------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

-------

**1022)** திருப்பூர் மிடுக்கான நகரம் திட்டத்தின் கீழ் திருப்பூர் மாநகராட்சி பகுதியில் சீர்மிகு சாலைகள் அமைக்கும் பணிக்கு முதல் கட்டத்தில் 12 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு இரட்டை உறை முறையில் 27-12-2019 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. இதில் சிப்பம் 10-ற்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர் ஸ்ரீசரவணா கன்ஸ்ட்ரக்சன்ஸ், பழனி நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலையைவிட 20.12 சதவீதம் அதிகமாக இருந்ததால் ஒப்பந்தப்புள்ளியில் விலைக்குறைப்பு செய்து தரக்கோரி 08-04-2020 அன்று மின்னஞ்சல் மூலமாக கடிதம் அனுப்பப்பட்டது. பலமுறை ஒப்பந்ததாரரை தொலைபேசி வாயிலாக தொடர்பு கொள்ளமுயன்ற போதும் அழைப்பை ஏற்கவில்லை. மேலும் இதுவரை விலைக்குறைப்புசம்மந்தமாக பதில் கடிதம் ஒப்பந்ததாரரிடமிருந்து வரப்பெறவில்லை.

மேற்படி பணியானது மத்திய அரசின் திட்டப் பணியாக உள்ளதால் மேலும் காலதாமதம் செய்ய இயலாத காரணத்தினால் அவசர அவசியம் கருதி இந்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை இரத்து செய்து, மீண்டும் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரலாம். மேலும் இப்பணிக்கு இதே ஒப்பந்ததாரர் பங்கு கொள்ள அனுமதி மறுக்கலாம். இதற்கான மாமன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலரின் முன்னனுமதி பெற்று தொடர்நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

**அலுவலகக் குறிப்பு** :1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

2) மத்திய அரசின் திட்டப் பணியாக உள்ளதால் அவசர அவசியம் கருதி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை இரத்து செய்து மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.

3) தனிஅலுவலரின் முன்னனுமதி பெற்று தொடர்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

( இ.1 / 6630 /(1-10) / 2017.

-------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

-------

**1023)** திருப்பூர் மிடுக்கான நகரம் திட்டத்தின் கீழ் திருப்பூர் மாநகராட்சி பகுதியில் சீர்மிகு சாலைகள் அமைக்கும் பணிக்கு முதல் கட்டத்தில் 12 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு இரட்டை உறை முறையில் 27-12-2019 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. இதில் சிப்பம் - II -ற்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர் ஸ்ரீ சரவணா கன்ஸ்ட்ரக்சன்ஸ், பழனி நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலையைவிட 7.05 சதவீதம் அதிகமாக இருந்ததால் ஒப்பந்தப்புள்ளியில் விலைக்குறைப்பு செய்து தரக் கோரி 08-04-2020 அன்று மின்னஞ்சல் மூலமாக கடிதம் அனுப்பப்பட்டது. பலமுறை ஒப்பந்ததாரரை தொலைபேசி வாயிலாக தொடர்பு கொள்ள முயன்ற போதும் அழைப்பை ஏற்கவில்லை. மேலும் இதுவரை விலைக்குறைப்பு சம்மந்தமாக பதில் கடிதம் ஒப்பந்ததாரரிடமிருந்து வரப்பெறவில்லை.

மேற்படி பணியானது மத்திய அரசின் திட்டப் பணியாக உள்ளதால் மேலும் கால தாமதம் செய்ய இயலாத காரணத்தினால் அவசர அவசியம் கருதி இந்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை இரத்து செய்து, மீண்டும் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரலாம். மேலும் இப்பணிக்கு இதே ஒப்பந்ததாரர் பங்கு கொள்ள அனுமதி மறுக்கலாம். இதற்கான மாமன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலரின் முன்னனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

**<u>1023-ன் தொடர்ச்சி</u>**

**அலுவலகக் குறிப்பு** :

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மத்திய அரசின் திட்டப் பணியாக உள்ளதால் அவசர அவசியம் கருதி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை இரத்து செய்து மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.
3) தனி அலுவலரின் முன்னனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

( இ.1 / 6630 / (1 - 11) / 2017

--------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

-------

(ஒம்) க.சிவகுமார், எம்.ஏ.,
தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்,
திருப்பூர் மாநகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையருக்காக,
திருப்பூர் மாநகராட்சி.

## திருப்பூர் மாநகராட்சி

**2020 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.**

**முன்னிலை : திரு.க.சிவகுமார், எம்.ஏ.,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,**
**திருப்பூர் மாநகராட்சி.**

******

**1024)** திருப்பூர் மாநகராட்சியில் 2012-13-ம் ஆண்டின் இயக்கமும் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்புதல் திட்டத்தின் கீழ் நிர்வாக அனுமதி பெறப்பட்ட பணியான வார்டு எண்.49, வெடத்தலாங்காடு தெற்குத் தோட்டம் ABT சாலை பகுதி மயானத்தில் நவீன எரிவாயு தகனமேடை அமைத்தல் பணிக்கு ( மதிப்பீட்டுத் தொகை ரூ.90,00,000/-) 05-04-2013 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன. மேற்படி பணிக்கு M/s. General Enviro Tech (P) Ltd., நிறுவனம் மதிப்பீட்டு விலையைவிட 4.99% கூடுதலாக வழங்கிய ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மாமன்றம் தனது தீர்மானம் எண்.529, நாள் 27-08-2014 அன்று ஒப்புதல் வழங்கி உள்ளது. அதன் அடிப்படையில் பணிக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு இப்பணி நடைபெற்று வருகிறது.

| S.No | Description of Work | Estimate Quantity | | Quantity to be Executed | |
|---|---|---|---|---|---|
| 1 | Earth Work Excavation for foundation in all types of soils and sub soils to full depth (such as Soils in etc | 160.00 | M³ | 180.71 | M³ |
| 2 | Supplying & Filling in Foundation Basement with filling sand in layers of not etc | 60.00 | M³ | 53.99 | M³ |
| 3 | Plain Cement Concrete:1:5:10 (One cement, Five sand and Ten coarse aggregate) using 40 mm etc | 42.00 | M³ | 66.45 | M³ |
| 4 | Reinforced Cement Concrete in 1:1½:3 mix using 20mm size HBG Metal | 128.00 | M³ | 149.01 | M³ |
| 5 | Brick work In CM 1:5 mix using best Second Class Table Moulded Chamber Burnt Bricks 9"x4½"x3" | | | | |
| | A.UP TO BASEMENT | 15.00 | M³ | 52.94 | M³ |
| | B. FOR SUPER STRUCTURE | 110.00 | M³ | 88.31 | M³ |
| 6 | Supplying and fabrication & placing in position Steel Reinforcement using etc | 12800.00 | Kg | 19248.84 | Kg |
| 7 | Supplying and Erecting Centering for sides and soffits including supports and strutting etc | | | | |
| | a.Grade Beam | 200.00 | M² | 315.00 | M² |
| | b.Roof Slab & Beam | 523.00 | M² | 564.44 | M² |
| | c.Sq. Column | 152.00 | M² | 162.39 | M² |
| 8 | Re- filling with Excavated Soil (other than sand) Complying with Std Specification for filling in etc | 85.00 | M³ | 112.91 | M³ |
| 9 | Providing Granolithic Floor finish with plain cement concrete 1 : 2 : 4 ( One cement, Two sand and etc | 153.00 | M² | | M² |
| 10 | Special Ceiling Plastering and finishing all the RCC exposed surfaces such RCC slabs, sunshades etc | 626.00 | M² | 491.34 | M² |
| 11 | White Washing Two Coats with best approved cement paint over plastering wall surface and etc | 1032.00 | M² | 938.57 | M² |
| 12 | Weathering Coarse Concrete using best quality broken brick jelly of size 20mm uniform gauge etc | 18.00 | M³ | 26.81 | M³ |

| S.No | Description of Work | Estimate Quantity | | Quantity to be Executed | |
|---|---|---|---|---|---|
| 13 | Provding and finishing over slopped RCC roof or Sunshade with one course of Ornamental tiles etc | 61.00 | M² | | M² |
| 14 | Finishing the Top of Roof with one course of machine Pressed Tiles of size 200mm x 200 mm x 20mm etc | 206.00 | M² | 268.09 | M² |
| 15 | Laying with new C.C. Laminated tiles (Like Dora tiles Rajasthan Kota Tiles etc),(anti skid) of 20mm etc | 1420.00 | M² | | M² |
| 16 | White Washing Two Coats with best approved cement paint over plastering wall surface and etc | 226.00 | M² | 1312.55 | M² |
| 17 | Cement paint Two coats with good quality of approved cement paint including cost of all etc | 1088.00 | M² | | M² |
| 18 | Painting Iron Works for doors, windows and ventilators, iron bars, weld mesh, wire mesh, etc | 33.00 | M² | 285.60 | M² |
| 19 | Flooring with Ceramic Colour Tiles of size 300 mm x 300 mm x 6 mm laid in CM 1:2 mix, 10 mm | 118.00 | M² | | M² |
| 20 | Dadooing and Skirting the Walls with colour glazed tiles of size CM 1:2 mix, 10 mm thick and pointing etc | 71.00 | M² | | M² |
| 21 | Supply of Rolling Shutter with necessary guide arrangement and fabricated with MS Sheet including | 6.00 | M² | 22.95 | M² |
| 22 | Supplying Fabricating Fixing of Steel Door Frames of size 100 mm x 60 mm and 1.25 mm thick etc | 2100.00 | Kg | 576.00 | Kg |
| 23 | Supplying & Fixing Steel Grill Ventilators Fabricated with steel plate of size 20 mm x 6 mm including etc | 360.00 | Kg | 2035.00 | Kg |
| 24 | Main Gate / Service Gate 5.5 x 1.2 m high openable both inside / Outside with all necessary fitting | 500.00 | Kg | 270.00 | Kg |
| 25 | Supply of Cement Jolly including cost of material, cost of labour for fixing etc., | 52.00 | M² | | M² |
| 26 | Wiring with 2 x 1.5 sq.mm( 22 / 0.3 ) PVC insulated unsheathed conductor of 1100 V grade in suitable etc | 15.00 | Pt | 116.00 | Pt |
| 27 | Wiring with 2 x 1.5 sq. mm (22 / 0.3)PVC insulated SC unsheathed Copper Conductor of 1100Vgrade etc | 5.00 | Pt | 13.00 | Pt |
| 28 | Supplying and Fixing of single box type 4x36 W Fluorescent Tube Light fitting complete with etc | 30.00 | Nos | 20.00 | Nos |
| 29 | Supplying & Fixing of 450 mm (18”) sweep ( light duty) AC Exhaust Fan complete without provision etc | 4.00 | Nos | 2.00 | Nos |
| 30 | Supplying and Fixing of 3 phases 4 wire 4 way ICDB of 32 amps per way with 100 ampsTPN MC etc | 2.00 | Nos | 2.00 | Nos |
| 31 | Supplying and Fixing of Horizontal Type 4 way Triple Pole natural MCB Distribution Board in sheet etc | 2.00 | Nos | 2.00 | Nos |
| 32 | Earthing as per PWD standard with an earth electrode of 2 M class ‘B’ GI pipe of diameter etc | 2.00 | Nos | 2.00 | Nos |
| 33 | Supplying and Run of 3 / 20 mm PVC unsheathed copper cable in suitable PVC rigid pipe etc | 50.00 | RM | 60.00 | RM |
| 34 | Supplying and Run of 2 of No. 8 SWG GI wire for guarding with cradle with No 8 SWG GI wire etc | 50.00 | RM | 60.00 | RM |
| 35 | Supplying and Laying of 3½ x 50 sq.mm PVC armoured LTUG cable in a trench to be excavated etc | 20.00 | RM | 20.00 | RM |
| 36 | Supplying of 4 x 10 sq.mm PVC armoured LTUG cable in a trench to be excavated at a depth etc | 30.00 | RM | 30.00 | RM |
| 37 | Supplying and Run of 2 No of 1/50 sq.mm [ 22 / 0.30) PVC unsheathed core cable of 1100 V etc | 100.00 | RM | 100.00 | RM |
| 38 | Supplying and Fixing of 1200mm ( 48” ) sweep AC Ceiling Fan complete with stepped electronic etc | 3.00 | Nos | 10.00 | Nos |
| 39 | Supplying and Fixing of WT Bulk Head Fitting Guard ( Philips / Bajaj / Crompton / K.lite ) etc | 4.00 | Nos | 4.00 | Nos |
| 40 | Supplying and Fixing of CFL light with Bulk Head Fitting Guard ( Philips / Bajaj / Crompton / K.lite ) etc | 5.00 | Nos | | Nos |

| S.No | Description of Work | Estimate Quantity | | Quantity to be Executed | |
|---|---|---|---|---|---|
| 41 | Supply of Hopper & Body of Gasifier made out of 6 mm thick MS plate with inner side of the gasifier etc | 1.00 | No | 1.00 | No |
| 42 | Supply & Fixing of Burner Assembly with complete burner management system ( including flame etc | 1.00 | No | 1.00 | No |
| 43 | Double Champer Furnace of size 1000mmx 1250mm x2850mm fabricated out of heavy duty etc | 1.00 | No | 1.00 | No |
| 44 | Gas Cleaning System ( GCS ) shall have Ash Extractor before the furnace for the removal etc | 1.00 | No | 1.00 | No |
| 45 | Chimney shall be fabricated out of MS material of thk 10/8/6 mm varying from bottom to top with etc | 1.00 | No | 1.00 | No |
| 46 | Centrifugal Fans of suitable rating for Combustion air dispatch into the gasifier and flue gas etc | 1.00 | No | 1.00 | No |
| 47 | Centrifugal Pump of suitable MoC to circulate to Mild Alkaline Water through the Venturi etc | 1.00 | No | 1.00 | No |
| 48 | Supply & Fixing of Wood Cutting Machine operated by a 1 hp Motor of std make and capable etc | 1.00 | No | 1.00 | No |
| 49 | Design & Construction of Effluent Treatment Plant complete with all necessary etc | 1.00 | No | 1.00 | No |
| 50 | Supply & Fixing of manuval Body Charge Trolley made up of MS Channels 3" x 11/2"x 1/4" and etc | 1.00 | No | 1.00 | No |
| 51 | Pipelines, Ducts of suitable diameters and length made of MS material, Ladder for fuel charging etc | 1.00 | Set | 1.00 | Set |
| 52 | Electrical Panel Board, Back - up DG Set, Electrical Cables, Wiring etc | 1.00 | Set | 1.00 | Set |
| 53 | Detailed 6 Months O & M Cost or fill of handling over to trust shall be provided to help the user guarantee | 1.00 | Set | 1.00 | Set |
| 54 | Supply and fixing of GI Pipes and Specials etc | | | | |
| | a) 25mm dia GI 'B' Class Pipe | 30.00 | RM | | RM |
| | b) 20mm dia GI 'B' Class Pipe | 30.00 | RM | | RM |
| | c) 25mm dia GI Union | 5.00 | Nos | | Nos |
| | d) 25mm GI Bend | 5.00 | Nos | | Nos |
| | e) 25mm GI Coupling | 10.00 | Nos | | Nos |
| | f) 25mm GI Tee | 5.00 | Nos | | Nos |
| | g) 25mm dia Elbow | 6.00 | Nos | | Nos |
| | h) 20mm dia GI Union | 3.00 | Nos | | Nos |
| | i) 20mm dia Bend | 10.00 | Nos | | Nos |
| | j) 20mm Dia Coupling | 20.00 | Nos | | Nos |
| | k) 20mm dia GI Tee | 20.00 | Nos | | Nos |
| | l) 20mm dia Elbow | 20.00 | Nos | | Nos |
| | m) 15mm dia Screw Down Tap | 10.00 | Nos | | Nos |
| | n) 25mm dia Gunmetal Gate Valve | 5.00 | Nos | | Nos |
| 55 | Supplying and filling well gravel in layers of not more than 15 cm thick well etc | | $M^3$ | 227.01 | $M^3$ |
| 56 | Paving the floor with Jet Black Granite Slabs - (Super fine polished with Machine etc | | $M^2$ | 3018.31 | $M^2$ |
| 57 | Dadooing the sides of walls with Premium quality colour glazed square tiles with Printed Design etc | | $M^2$ | 218.05 | $M^2$ |
| 58 | Supplying and fabrication and fixing in position of anodised natural colour matt fininsh etc | | $M^2$ | 61.80 | $M^2$ |
| 59 | Supplying and fabrication and fixing in position of anodised natural colour matt fininsh Door etc | | $M^2$ | 5.76 | $M^2$ |
| 60 | Painting two coats with ready mixed Exterior Emulsion paint of approved etc | | $M^2$ | 1312.55 | $M^2$ |
| 61 | Supplying and fixing in position of C.I Manhole cover (heavy duty with frame) of size etc | | No | 1.00 | No |
| 62 | Supply of 3 Phase Submersible 0.5 HP Pumpset suitable for 100mm dia borewell etc | | No | 1.00 | No |

| S.No | Description of Work | Estimate Quantity | | Quantity to be Executed | |
|---|---|---|---|---|---|
| 63 | Supply, delivery and fixing of 2000 Litres HDPE tank as per IS 12701 / 1996 including etc | | No | 1.00 | No |
| 64 | Supply and delivery of the following size of PVC Pipes with IS specification etc., | | | | |
| | 32mm (1") PVC Pipe | | RM | 91.50 | RM |
| | 110mm (4") PVC Pipe | | RM | 10.50 | RM |

ஆகவே மேற்கண்ட மதிப்பீட்டில் உள்ள இனங்கள் கூடுதல் ஆகவும் மற்றும் மதிப்பீட்டில் இல்லாத சில இனங்கள் மேற்கொள்ளவும் ஆகும் தொகை அனுமதிக்கப்பட்டுள்ள தொகைக்குள் வருகின்ற படியால் மேற்கண்ட பணிகளை செய்ய அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் இப்பணியின் அவசர அவசியம் கருதி அங்கீகரிக்கப்பட்ட தொகைக்குள் இதே ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தின்படி இப்பணியை மேற்கொள்ளவும், மேற்படி பணியில் ஏற்பட்டுள்ள பணிவிலக்குகளுக்கு ( Deviation with in the Estimate) மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.
2) திட்டப் பணியாக உள்ளதால் மாமன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி, தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மதிப்பீட்டுத் தொகைக்கு மிகாமல் கூடுதல் அளவுகள் மற்றும் சில கூடுதல் இனங்கள் மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

( ம.எண்.164 / 2012.13 / CE)

-----

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

-------

**1025)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.4, வார்டு எண்.60, ஆண்டிபாளையம் கிராமம் க.ச.27.3 பி1ஏ-ல் கெய்சர் கார்டன் என பெயரிட்ட பகுதியில் புதியதாக குடியிருப்பு மனைப்பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம்மனைப்பிரிவுக்கு புதிய தெருவிளக்கு அமைக்க ரூ.4,25,000/- மாநகராட்சியில் பற்று சீட்டு எண்.032/.501/5 /18-19 . 0006650 நாள் 27-03-2019-ல் பணம் செலுத்தப்பட்டுள்ளது. அதில் உள்ள தெருவில் ஆறு மின்கம்பங்களுக்கு புதிய தெருவிளக்குகள் பொருத்த மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1) அனுமதிக்கலாம்.
2) இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடரப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

( இ.1 / 1231 / 2020 / ம.4)

----

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

-------

**1026)** திருப்பூர் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் திருப்பூர் மாநகராட்சியில் சீர்மிகு சாலைகள் அமைக்கும் பணிக்கு இரண்டாம் கட்டமாக ரூ.71.79 கோடி திட்ட மதிப்பீட்டில் சிப்பம் 1 முதல் 8 வரையிலான பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.17573/2018/ IHSDP-3, 1 to 8 நாள் 09-01-2020 வாயிலாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு உள்ளது. நிர்வாக அனுமதி பெறப்பட்ட மேற்படி பணிகளுக்கு தலைமைப் பொறியாளர், சென்னை அவர்களின் செயல்முறை எண்.875/2020 . DO-1 ( ER.No.500 / 2019-20 முதல் 507 /2019-20) நாள் 22-01-2020 வாயிலாக 8 சிப்பங்களுக்கு மொத்தம் ரூ.71.79 கோடி மதிப்பீட்டிற்கு

**1026-ன் தொடர்ச்சி**

தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டதை அடுத்து மேற்படி பணிக்கு 10-03-2020அன்று இரட்டை உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டது. அதன்படி 1 முதல் 8 வரையிலான பணிகளுக்கு பெறப்பட்ட விலைவிகிதங்களை அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு விலைவிகிதத்தின் ஒப்பு நோக்கும்பொழுது அதில் குறைவாக அளித்திருந்த ஒப்பந்ததாரர்களிடம் விலை குறைப்பு செய்து தரக் கோரி கடிதம் அனுப்பப்பட்டு அவர்களிடமிருந்து பெறப்பட்ட விலைகுறைப்பு கடிதத்தின்படி விலைவிகித விபரங்கள் கீழ்க்கண்டவாறு.

| சிப்பம் எண் | வரிசை எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைவிகித விபரம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம்/ குறைவு | விலைக்குறைப்பிற்கு பின்அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம் / குறைவு |
|---|---|---|---|---|
| I | 1 | M/s. RPP Infra Projects, Erode | (+)10.68 அதிகம் | (+)9.98 அதிகம் |
| | 2 | M/s. P&C Projects (P) Ltd., Erode | (+)13.31 அதிகம் | |
| II | 1 | Thiru.A.Senthilkumar Dindigul | (+)6.60 அதிகம் | (+)6.60 அதிகம் |
| | 2 | M/s.Shree Shayee Associates, Tiruppur | (+)9.99 அதிகம் | |
| III | 1 | Thiru.A.Senthilkumar Dindigul | (+) 6.67 அதிகம் | (+)6.67 அதிகம் |
| | 2 | M/s.Shree Shayee Associates, Tiruppur | (+)10.13 அதிகம் | |
| IV | 1 | Thiru.A.Senthilkumar Dindigul | (+) 6.65 அதிகம் | (+)6.65 அதிகம் |
| | 2 | M/s.Shree Shayee Associates, Tiruppur | (+)10.29 அதிகம் | |
| V | 1 | M/s. RPP Infra Projects, Erode | (+)8.93 அதிகம் | (+)8.86 அதிகம் |
| | 2 | M/s. P&C Projects (P) Ltd., Erode | (+)9.32 அதிகம் | |
| VI | 1 | M/s. RPP Infra Projects, Erode | (+)6.84 அதிகம் | (+)6.64 அதிகம் |
| | 2 | M/s. P&C Projects (P) Ltd., Erode | (+)9.52 அதிகம் | |
| VII | 1 | M/s. RPP Infra Projects, Erode | (+ 9.11 அதிகம் | (+)9.02 அதிகம் |
| | 2 | M/s. P&C Projects (P) Ltd., Erode | (+)11.89 அதிகம் | |
| VIII | 1 | M/s. RPP Infra Projects, Erode | (+) 8.79 அதிகம் | (+) 8.71 அதிகம் |
| | 2 | M/s. P&C Projects (P) Ltd., Erode | (+)11.94 அதிகம் | |

மேற்கண்ட 8 சிப்பங்களின் L-I ஒப்பந்ததாரர்களின் விலை குறைப்பிற்கு பின் விலைவிகிதமானது கூடுதலாக உள்ளதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை நகராட்சி நிர்வாக ஆணையரக ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யும் குழுவின் ( Tender Award Committee) ஒப்புதல் பெற்று பணியினை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1) அனுமதி வழங்கலாம்
2) மேற்படி பணி திட்டப் பணியாக உள்ளதால் பணியின் அவசர அவசியத்தை கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
3) மேற்படி பணிக்கான கூடுதல் செலவினத்தை ஸ்மார்ட் சிட்டி நிதியில் மேற்கொள்ள உள்ளதை மாமன்றத்தில் பதிவு செய்யலாம்.

( இ.1 / 6630 / I ( II) - 2017 )

--------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

-------

**1027)** மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவையில் விதி-110ன் கீழ் உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்வேறு துறைகளிலும் துப்புரவு பணியாளர்களாக பணிபுரிந்து வரும் பணியாளர்களின் செயல்பாடுகளை கௌரவிக்கும் வகையிலும் அவர்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையிலும், அனைத்து துப்புரவு பணியாளர்களும் இனி **"தூய்மைப் பணியாளர்கள் " ( Cleanliness Workers)** என அழைக்கப்படுவார்கள் என அரசாணை ( நிலை) எண்.53, நாள் 21-05-2020-ல் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

மேற்படி அரசாணையின்படி இம்மாநகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களை இனி தூய்மைபணியாளர்கள் (Cleanliness Workers) என அழைக்கப்படும் எனவும், இப்பொருண்மை குறித்து நகராட்சி பணி விதிகள், பேரூராட்சிப் பணி விதிகள் மற்றும் ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி பணி விதிகளில் உரிய திருத்தம் மேற்கொள்ள உரிய வரைவு திருத்த அறிவிக்கையுடன் ( Draft Amendment Notification ) அரசுக்கு அனுப்புமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி அரசு ஆணை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அ) பதிவு செய்யலாம்.

ஆ) அரசாணையின்படி இம்மாநகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களின் பணி விதிகளில் **"தூய்மைப் பணியாளர்கள் "** என பெயர் மாற்றம் செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம். ( எச்.1 / 2700 / 2020 )

--------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

-------

**1028)** நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை-5 அவர்களின் D.O கடித எண்-1588/2015/ஜே1 நாள்:15.06.2015,28-03-2016 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை-5 அவர்களின் கடித ந.க.எண்.2571/J1/2017 நாள்:14-02-2017ன்படி திருப்பூர் மாநகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் மற்றும் இதர கொசுவினால் பரவும் நோயினை கட்டுப்படுத்த தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே பார்வையில் கண்டுள்ள உத்திரவில் 300 குடும்பங்களுக்கு ஒரு கொசுதடுப்பு பணியாளர் (DBC) வீதம் தற்காலிகமாக நிர்ணயம் செய்ய உத்திரவிடப்பட்டுள்ளது. இம்மாநகராட்சியில் 60 வார்டுபகுதிகளிலும் கொசு தடுப்பு பணியினை மேற்கொள்ள மலேரியா பணியாளர்கள் பற்றாக்குறையாக இருப்பதாலும் தற்போது டெங்கு நோய் பரவாமல் கட்டுப்படுத்த தினமும் மாநகராட்சி பகுதியில் உள்ள அரசு / தனியார் மருத்துவமனைகளிலிருந்து தினசரி காய்ச்சல் கண்டவர்களின் பட்டியல், பெறப்பட்டு ஆறு நாள் வட்ட சுழற்சி அடிப்படையில் பணிபுரிய ஏதுவாக மண்டலம் ஒன்றிற்கு நாளொன்றுக்கு மண்டலம் 1ற்கு 50 நபர்கள், மண்டலம் 2ற்கு 50 நபர்கள், மண்டலம் 3ற்கு 50 நபர்கள் மற்றும் மண்டலம் 4ற்கு 50நபர்கள் வீதம் நான்கு மண்டலங்களுக்கு தினசரி மொத்தம் 200 DBC பணியாளர்களை அவசர அவசியம் கருதி பொதுசுகாதார நலனை முன்னிட்டு 01-06-2020 முதல் 30-06-2020 வரையுள்ள காலத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் (நாள் ஒன்றுக்கு ஒரு நாளுக்கு ரூ.355/-) மகளிர் சுய உதவிக்குழு பணியாளர்கள் / இதர தற்காலிக பணியாளர்களை கொண்டு மேற்படி பணிக்கு அமர்த்தி பணிபுரிய நிர்வாக அனுமதியும் மற்றும் இதற்காகும் உத்தேச செலவீனம் ரூ.19.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**1028-ன் தொடர்ச்சி**</u>

**அலுவலக குறிப்பு:**

1. செலவினத்திற்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. இம்மாநகரில் டெங்கு காய்ச்சல் மற்றும் இதர கொசுவினால் பரவும் நோயினை கட்டுப்படுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள அவசர அவசியம் கருதி 01-06-2020 முதல் 30-06-2020 வரையுள்ள காலத்திற்கு மட்டும் தினக்கூலி அடிப்படையில் தினசரி 200 DBC பணியாளர்களை பணியமர்த்த மாமன்றம் அனுமதிக்கலாம்.

**(எச்1/ 2617 /2020)**

------------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

-------

**1029)** திருப்பூர் மாநகராட்சியின் 2018-19 ஆம் ஆண்டிற்குரிய நிர்வாக அறிக்கையை மாமன்றத்தின் பார்வைக்கும், மேலும் மேற்படி நிர்வாக அறிக்கையினை மாவட்ட ஆட்சித் தலைவர், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை ஆகியோருக்கு அனுப்பப்பட வேண்டியுள்ளதால், அதனை புத்தக வடிவில் அச்சடிக்க வேண்டியுள்ளது. எனவே மேற்படி நிர்வாக அறிக்கையை, ஈரோடு மாவட்ட மகளிர் கூட்டுறவு சங்கம் அச்சகத்தில் (50 எண்ணிக்கை) அச்சடித்துக் கொள்ளவும், அதற்காகும் செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அ) அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியத்தை முன்னிட்டு, ஆணையர். தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று அச்சடித்துக் கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு அனுமதி வழங்கலாம்.

( எச்.2 / 3630 / 2019)

-----

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

-------

(ஒம்) க.சிவகுமார், எம்.ஏ.,
தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்,
திருப்பூர் மாநகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையருக்காக,
திருப்பூர் மாநகராட்சி.